# பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் வெலிசறை மற்றும் மிரிஹானை தடுப்பு நிலையங்களில் தடுத்து வைத்துள்ளவர்களுக்கு உணவு வழங்குதல்

## ஒப்பந்த இலக்கம் : DIE/PRO/05/2024/74

01. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் வெலிசறை மற்றும் மிரிஹானை தடுப்பு நிலையங்களில் தடுத்து வைத்துள்ளவர்களுக்கு உணவு வழங்குவதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் சார்பில் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

02. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் இந்த விலைமனுக் கோரல் நடாத்தப்படும்.

03. இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு, இது தொடர்பான மேலதிக விபரங்களை, பத்தரமுல்ல, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுகுறுபாயா", 5 ஆம் மாடி, "B" பகுதியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடமிருந்து 2024.06.20 ஆம் திகதி முதல் 2024.07.09 ஆம் திகதி வரை எந்தவொரு கடமை நாளிலும் மு.ப. 9.00 மணி - பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், விலைகூறல் ஆவணங்களை அதே முகவரியில் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

    தொடர்புகளுக்கு: தொலைபேசி இல.:011-2101559

04. மீளளிக்கப்படாத ரூபா ஐயாயிரத்து ஐந்நூறு (ரூ.5,500/-) கட்டணத்தைச் செலுத்தி, எழுத்துமூல விண்ணப்பமொன்றை, பத்தரமுல்ல, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுகுறுபாயா", 5 ஆம் மாடி, "B" பகுதியில் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் சமர்ப்பிப்பதன் மூலம் 2024.06.20 ஆம் திகதி முதல் 2024.07.09 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை, அச்சிடப்பட்ட முழுமையான விலைகூறல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும். காசாக கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்

05. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை, "மூலப்பிரதி", "இணைப்பிரதி" என இரு பிரதிகளில் தயாரித்து, 2024.07.10 ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, தலைவர், திணைக்களக் கொள்முதல் குழு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் 5 ஆம் மாடி, "B" பகுதி, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது நேரில் வந்து ஒப்படைக்கவோ வேண்டும். விலைமனுக் கோரல் முடிவடைந்த உடனே மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் வருகைதருவதற்கு விருப்பம் தெரிவித்த விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலை மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், அவை திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்

06. விலைமனுதாரர்களினால் கையளிக்கப்படுகின்ற விலைமனுவானது, விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 77 நாட்களுக்கு அல்லது ஏதேனுமொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

07. எல்லா விலைமனுக்களும், விலைமனுக்கோரல் ஆவணத்தில் பந்தி 3.3 இல் காட்டப்பட்டுள்ளவாறு, விலைமனு பிணைமுறியொன்றுடன், குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் பெயரில் (முகவரிக்கு) அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன், விலைமனு பிணைமுறியானது ரூபா நான்கு இலட்சம் (ரூ.400,000/-) பெறுமதியைக் கொண்டதும், 2024.10.22 ஆம் திகதி வரை செல்லுபடியானதுமான இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கியொன்றினால் விநியோகிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

08. விலைமனு முன் சந்திப்பொன்று 2024.07.01 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பத்தரமுல்ல, "சுஹறுபாயா", 5 ஆம் மாடியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவில் நடைபெறும்.

**ஐ.எஸ்.எச்.ஜே. இலுக்பிட்டிய**
**கட்டுப்பாட்டாளர் நாயகம்**
**குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்,**
**"சுஹறுபாயா", ஸ்ரீ சுபூத்திபுர வீதி,**
**பத்தரமுல்ல.**